**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.80 /2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(மருதுபாண்டி)**
**27.8.2024**

**8ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனது அப்பா உலகநாதன் உயிருடன் இருக்கும் வரை 1ம் பிரதிவாதியிடம் பாகம் கேட்டு பஞ்சாயத்தோ வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் ஊரில் பஞ்சாயத்து நடந்தது. அவ்வாறு பஞ்சாயத்து நடந்ததற்கு எழுத்து மூலமான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. பஞ்சாயத்து எதுவும் நடைபெறவில்லை என்றும் எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை பாகம் எதுவும் கேட்கவில்லை என்றும் அவரது பாகத்தை பொருத்து 22.7.2002ம்தேதி ரூ.4,00,000/- பெற்றுக்கொண்டு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனை தொடர்ந்தும் 1ம் பிரதிவாதியிடம் எனது அப்பா பணம் வாங்கியுள்ளார் என்றும் அதனால் தான் அவர் பாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா பாகம் எதுவும் கேட்கவில்லை என்றும் 1ம் பிரதிவாதிதான் தாவா சொத்தின் முழு உரிமையாளர் என்ற அடிப்படையில் அனுபவம் செய்து வந்தார் என்றும் அதனால் தாவா சொத்தில் பாகம் கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்குமூலம் தவறு என்றால் சரியல்ல. வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கததக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**